விவரங்களை வைத்துக் கொண்டு, அரசு முடிவு எடுத்து, அதில் ஆணை பிறப்பித்து, அதை அமல்படுத்திக்கொண்டிருக்கிறோம். அதிலேயிருந்து நாம் சில மாறுதல்களையும் செய்து கொண்டிருக்கிறோம். தேவையானால் ஒரு புதிய குழு அமைக்க வேண்டுமா, மீண்டும் பரிசீலிக்க வேண்டுமா என்பதைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 123, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

123—

காரைக்குடியில் நூலகக் கட்டிடம்

*4409—திருமதி கற்பகம் இளங்கோ :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காரைக்குடியில் நூலகக் கட்டிடம் வாடகைக் கட்டிடத்தில் செயல்படுவதால் அதற்கு நூலகக் கட்டிடத்தை நகரின் மையத்தில் அரசு செலவில் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காரைக்குடி நகரில் தனியார் அல்லது உள்ளாட்சி நிறுவனத்திடமிருந்து இலவச காலிமனை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இலவச காலிமனை பெறப்பட்டவுடன் நூலக ஆணைக் குழு நிதியிலிருந்து நூலகக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கூறியமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனை இடம் கிடைத்தவுடன், ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதாகக் கூறினார்கள். எப்போது துவங்கும் ? அதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் கிடைத்தவுடன் கட்டிடம் கட்ட ஆரம்பிக்கப்படும். இரண்டு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தக் கட்டிடம் அமையும்.

1992 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 124-திரு. எஸ். எஸ். ராமசுப்பு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

124—

கிளைக் காசநோய் மருத்துவமனை

*4898—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் அச்சங்குட்டம் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதியில் பீடிசுற்றும் தொழிலாளர்கள் நிறைய பேர் வாழ்வதால், இப் பகுதியில் கிளைக் காசநோய் மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தனியாக கிளைக் காசநோய் மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த அச்சங்குட்டம் கிராமத்தைச் சுற்றி பல கிராமங்களில் பீடித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் காச நோயினால் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அச்சங்குட்டம் பகுதியில் காசநோய் மருத்துவமனையின் கிளை ஒன்றைத் தொடங்க வேண்டிய அவசியம் இருப்பதனால் நீங்கள் அதனை மறுபரிசீலனை செய்து, அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளத்தில் இப்போது 30 படுக்கைகள் கொண்ட ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அங்கே நான்கு மருத்துவர்கள் பணியாற்றி வருகிறார்கள். இப்போது அங்கேயே கூட புற நோயாளிகளாக இருந்து, அவர்கள் மருத்துவம் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இப்போது இருக்கிற முறைப்படி, காச நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வெளியிலே புற நோயாளிகளாகவே வந்து மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு முழுவதுமான வாய்ப்பு இருக்கிறது. அதுவுமல்லாமல், நாகர்கோவிலில் 400 படுக்கைகளோடு கூடிய மிகப்